ஏமாற்றங்களே அவருக்காகக் காத்திருந்தது.

ஏமாற்றங்களை ஏற்றத்திற்கான படிகளாக நினைக்கும் துவளாத மனம் ஐயாவுக்கிருந்தமையால் விடாமுயற்சியும் கடின உழைப்பும் தன்னம்பிக்கையும் அவரை கேகாலையில் முன்னணி வர்த்தகர்களில் ஒருவராக அடையாளம் காட்டி உயரவைத்தது.

புகையிலை வியாபாரத்தில் கேகாலையில் பெயர்போன வர்த்தக நிலையமாக அவரது கடை அனைவராலும் அறியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற முதுமொழிக்கிணங்க அவரது செயலூக்கம் 'ஐயா'வை வாழ்வின் சகல நெருக்கடிகளையும் வென்று முன்னேற வைத்தது என்றால் மிகையில்லை.

ஆனால் காலமாற்றமும், அரசியல் குழப்பமும் ஒருங்குசேர நாட்டை உலுக்கிய இனக்கலவரங்களால் மூன்று தடவைகள் ஐயாவின் வர்த்தக நிலையம் இனவெறியர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

ஒவ்வொரு முறையும் சோர்விலா திடமனதுடன் சாம்பலில் இருந்தே மீண்டுயிர்த்தெழும் 'பீனிக்ஸ்' பறவைபோல் அவர் தன்னை தனது வர்த்தக ஆளுமைத்திறனாலும் - அவரது அன்புக்குரிய அதேசமயம் ஐயாவை மதித்த பெரும்பான்மையின சகோதரர்களின் ஆதரவு கலந்த உதவியாலும் அவர் தனது தொழிலில் புத்துயிர்ப்பு கொள்பவராகவே இருந்தார்.

அதுதான் ஐயா, அதுதான் ஐயாவின் பலம்

ஐயா மும்மொழி ஆளுமை கொண்டவர்

தமிழ், சிங்களம், ஆங்கிலம் அனைத்தும் இவருக்கு பேச, எழுத வரும் என்பது அவரது வளமிக்க பலம். இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களும் அவருக்கு அத்துப்படி. இலங்கை பற்றிய அனைத்து விபரங்களையும் விரல் நுணியில் வைத்திருந்தமை அவரது தொழில் முயற்சிகளுக்கு, உயர்ச்சிகளுக்கு கைகொடுத்தது.

தனது வாழ்வின் இறுதி நாள்வரை புதினப் பத்திரிகைகளை தவறாமல் முழுமையாக வாசிப்பது அவரது அன்றாட வாழ்வியல் செயற்பாடாகவும் இருந்தது. தீவிர வாசிப்பு, அவரை பத்திரிகை செய்திகள் மற்றும் விடயங்கள் குறித்த ஆய்வுப் பார்வையையும் அவருக்குள் ஏற்படுத்தியிருந்தமையை அவரை அறிந்தோர் நன்கு அறிவர்.

ஐயா இறைபக்தி மிக்கவர், ஆன்மீக தர்மங்களை மதித்தவர். மானுடநேயம் மிக்கவர். அவரது இறை பக்தியுடன் கூடிய ஆன்மபலம் அவரது வாழ்வில் உண்மை-நேர்மை இவற்றை கடைப்பிடிக்க காரணமாயிற்று. தொழில் அதிபராக இருந்த அவரை 'யுத்த சூழல்' தொழிலாளியாக்கிய போதும், அவர் எந்த நிலையிலும் தான் கடைப்பிடித்து வந்த உண்மை, நேர்மை ஆகிய பண்பாட்டுத் தளங்களை விட்டு விலகியதே இல்லை. வாழ்வின் கடைசிக் கணம் வரை அவரது 'சுயதர்மக்' கொள்கைகளை அவர் புறக்கணித்து ஒதுக்கியது கிடையாது.

'மேலே ஒருவன் எல்லாத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிறான்' - என அவர் அடிக்கடி சொல்வார்.

அது எல்லாம்வல்ல ஒரு பராசக்தி மீதான அவரது நம்பிக்கை

வெளிப்பாடாக வெளிவரும் வார்த்தைகள் "பிள்ளைகள் நன்றாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் பாவங்கள் எதனையும் சேர்த்து வைத்திருக்கவில்லை" எனவும் நெஞ்சைத் தொட்டுச் சொல்வார். அது அவரது ஆன்ம சுத்தம் குறித்த அவரது நம்பிக்கையின் வெளிப்பாடாக வெளிவரும் வார்த்தைகள். ஐயாவை புரிந்துகொள்ள இந்த வார்த்தைகளே போதும்.

அம்மாவின் பிரிவு ஐயாவை பெருமளவில் பாதித்திருந்தது நிஜமே.

அம்மா ஐயாவின் இன்னொரு பலமாகவே இருந்தார்.

அம்மா அடிக்கடி சொல்வார் – "எனக்குப்பின் இவர் என்ன செய்யப்போகிறாரோ...?" என்று...

அம்மாவின் இந்த வார்த்தைகள் ஐயா எந்த அளவுக்கு வெள்ளந்தியாக இருந்திருக்கிறார் என்பதை தெளிவுபடுத்தும்.

ஆனாலும் ஐயா இறுதிக்காலம் வரையும் மன நிறைவாகவும், மகிழ்ச்சியுடனுமே இருந்தார்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள் என அனைவரும் அவரை சந்தோஷமாகவே வைத்திருந்தனர்.

தனது பேர்த்திகளான வைஸ்ணவி, வர்சினி, தாரிகா ஆகியோரின் வடிவில் 'அம்மாவை' அவர் கண்டு நிறைவான மகிழ்வு கொண்டார்.

அவர்களை அவர் தனது மனைவியின் பெயரால் சின்னக் கண்ணம்மா என அழைத்து மகிழ்வார்.

அவரது வாழ்வின் கடைசி கணங்களிலும் சின்னக்கண்ணம்மாவின் நலம் குறித்து விசாரித்து மகிழ்ந்தார்.

பேரக் குழந்தைகளுடன் தானும் ஒரு குழந்தையாகி செல்லம் கொஞ்சி விளையாடி மகிழ்வார்.

ஐயா, தாத்தாவாகி பேரக்குழந்தைகளுடன் விளையாடி மகிழும் அந்த நேரங்கள் அவர் தனை மறந்து மனநிறைவுகாணும் பொழுதுகள்

நீண்ட வாசிப்பு அவரது இயல்பான வாழ்க்கை நிகழ்வாகும்.

அவரிடம் பல அரிய நூல்கள் இருந்தன. அவைகளில் பெரும்பாலானவை வரலாற்றை மையமாகக் கொண்டவைகளாகும்.

அவருக்கு பிடித்தமான நூல்களில் ஒன்று மூத்த ஊடகவியலாளரும் தற்போது லண்டன் 'புதினம் பத்திரிகையின் ஆசிரியருமான 'இராஜகோபால்' எழுதி வெளியிட்ட 'வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவுக்கு கப்பலோட்டிய தமிழர்கள்' என்ற 'அன்னபூரணி' இரட்டைப் பாய்மரக் கப்பல் பற்றிய புத்தகமாகும்.

அன்னபூரணியம்மாள் கப்பல் பற்றிய அனைத்து கதைகளையும் தகவல்களையும் அவர் அறிந்தவராகவே இருந்தார்.

இன்றைய இளைய தலைமுறையினர் அன்னபூரணி கப்பல் பற்றியும், அதன் கடலோடிகள் பற்றியும், அது சம்பந்தப்பட்ட வரலாற்று சாதனை பற்றியும் அறிந்திருக்க வேண்டும் எனவும் ஐயா விரும்பியிருந்தார்.

# வல்வையில் இருந்து அமெரிக்கா சென்ற அன்னபூரணி இரட்டைப் பாய்மரக் கப்பல்

வானளாவ எழுந்து நின்கின்ற அந்த நினைவுத் தூபி... என் கண்முன்னே பிரமாண்டமாக தோற்றமளித்துக்கொண்டிருக்கின்றது...!

மாலை நேரங்களில் மனதுக்கு அமைதியைக் கொடுக்கும் அந்த நினைவாலயத்தின் முன்னால் சிறிது நேரம் நான் மெய்மறந்து நிற்கின்றேன்.

எனக்குமுன்னே வெண்மையாக நரைத்துப்போன தலையும் வெறும் தோளிலே போர்த்திய சால்வையும் கொண்ட ஒரு மனிதர் கண்களை மூடியபடி அமைதியாக நின்றுகொண்டிருந்தார்.

அந்த தூபியின் முன்னால் நின்ற அந்த மாமனிதரின் உதடுகள் ஏதோ முணுமுணுப்பதுபோல் தெரிந்தது...

மெல்லிய தென்றல் காற்று வீசிக்கொண்டிருந்தது... அந்தக் காற்றிலே அங்கு ஓங்கி வளர்ந்துகொண்டிருக்கும் சவுக்க மரங்கள் ஆடி அசைந்து மெல்லிய கீதம் இசைப்பது போல் ஒலி எழுப்பிக்கொண்டிருந்தன...

அந்த முதியவரின் தோற்றமும், பஞ்சடைந்து உலர்ந்துபோன தலைமயிரும், தெளிந்த பார்வையும் என்னை அவர்பால் ஈர்த்தது... அவரது அந்த மூப்பெய்திய தோற்றம் அவரை ஒரு சாதாரண ஆளாக எனக்குக் காட்டவில்லை.

மெதுவாக அவருக்கு அருகில் சென்று அவருடன் பேச்சுக் கொடுப்பதற்காக வாயைத் திறந்தேன்...

"தம்பி!... இந்தத் தூபியைப் பாருங்க...
சரியாக அன்னபூரணிக் கப்பல் மாதிரித் தெரியல்லை..."
அவர் என்ன கூற வருகிறார் என்று எனக்குப் புரியவில்லை...
"ஐயா!... அன்னபூரணியா...?
நீங்கள் சொல்வது புரியவில்லையே..."
என்று வார்த்தைகள் குழம்பிக்கொண்டிருந்தன...
"என்ன தம்பி!... நீங்களும் இந்த
ஊர்தானா...? ஹா... ஹா... ஹ..."

என்னை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்துக்கொண்ட அந்தப் பெரியவர், தனக்குள் எழுந்த சிரிப்பை அடக்கமாட்டாதவராய் வாய்விட்டே பலமாகச் சிரிக்கத் தொடங்கிவிட்டார்...

எனக்கோ அந்த நேரம், என்ன செய்வது என்று தெரியாத நிலையில் குழப்பமாகத்தான் இருந்தது.

"வல்வெட்டித்துறையில் இருந்து 1939ஆம் ஆண்டு சுயேஸ் கால்வாயி னூடாக அமெரிக்காவரை ஓட்டிச் செல்லப்பட்ட இரட்டைப் பாய்க் கப்பல் அன்ன பூரணியைத் தெரியாதவராக இருக்கிறீர்களே...

ஓ... அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியைத், தன் மனப்பதிவில் இருந்து அழிக்கமுடியாத அந்தச் சம்பவத்தை நான் அறிந்திருக்கவில்லை என்று எண்ணியதும் அவருடைய முகத்தில் ஏமாற்றமும் அதிர்ச்சியும் ஏற்பட்டிருக்கவேண்டும்.

எப்பொழுதோ நடைபெற்று முடிந்த அந்தச் சாதனையை நான் மட்டுமல்ல எங்களில் பலர் அதை மறந்துவிட்டனர் என்பதை அவர் நாசூக்காகச் சுட்டிக்காட்டியதும் எனக்கும் வெட்கமாகப் போய்விட்டது.

பொங்கும் கடல் அலைகளினூடாக சுயேஸ் கால்வாய் வழியாக அமெரிக் காவுக்கு ஓட்டிச் செல்லப்பட்ட கப்பல் 'அன்னபூரணி அம்மாள்' நவீன தொழில் நுட்பம் வளர்ச்சியடையாத அந்தக் காலத்தில் உள்ளூர் மரத்தில் எமது ஊர் மேத்திரியினால் கட்டப்பட்டு வல்வைக் கடலோடிகளினால் மிகத் துணிச் சலாகக் கொண்டுசெல்லப்பட்ட இரட்டைப் பாய்க் கப்பலான 'அன்னபூரணி அம்மாள்' என்ற அந்தக் கப்பல் வல்வெட்டித்துறைக்கு மட்டுமல்ல தமிழ் உலகுக்கே பெருமை சேர்க்கக்கூடியது. 1936ம் ஆண்டு அமெரிக்க செல் வந்தரும், பிரபல நூலாசிரியருமான வில்லியம் அல்பேட் றொபின்சன் என்பவரால் வாங்கப்பட்ட 'அன்னபூரணி அம்மாள்' ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்பதை நாம் மறந்துவிட்டதும் துர்ப்பாக்கியமானதுதான்...

ஆம்!... அன்று அந்தக் கப்பலில் சென்றவர்களில் ஒருவரான திரு. ஐயாத்துரை இரத்தினசாமி தான் இவர் என்றதும் எனது மகிழ்ச்சி இரட்டிப்படைந்தது... வல்வெட்டித்துறையில் உள்ள வித்தனை ஒழுங்கையில் தான் வசிக்கின்றார் என்பதை அறிந்ததும் அவரது சாதனைகளையும், அந்த வரலாற்றையும் நேரில் கேட்டு அதனை ஆவணப்படுத்த வேண்டும் என்ற ஆவல் என் உள்ளத்தில் முகிழ்த்துக்கொண்டிருந்தது... நான் அவருடன் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்ததும், அந்த இடத்திற்கு காலஞ்சென்ற அருள் அம்பலவாணரும் வந்துசேர்ந்தார். அருள் அம்பலவாணர் என்பவர் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், "ஆனந்தவல்லி" கப்பலின் தண்டையலாக இருந்து பின்னர் கொழும்புத் துறைமுகத்தில் Tug Master ஆகக் கடமைபுரிந்தவர். அவர் வல்வையின் இளம் சந்ததியினரை கடல் மாலுமித் தொழில் நுட்பத்தில் ஊக்குவிக்கும்பொருட்டு, காலஞ்சென்ற கப்டன் கா. மோகனதாசின் உதவியுடன் வல்வையில் ஒரு நாவாய் பயிற்சிப் பள்ளியை (Navigation Training School) ஆரம்பித்துச் சிலகாலம் செயல்படுத்தி வந்தார்.

அவரின் உதவியுடன் இது தொடர்பாக சில விபரங்களை மாமனிதராகக் கௌரவிக்கப்பட்ட திரு. ஐயாத்துரை இரத்தினசாமியிடம் நேரில் கேட்டுத்

